# என் மன வானில்....

## En Manavanil (2006)



லோசனா பாலசுப்பிரமணியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிகு காஞ்சனா உறவு பாஞ்சாலன் - திரு. ஜெகதீசன்
அவர்கட்கு என் இனிய அன்பளிப்பு.
அன்புடன் பாசமுடன், நன்றியுடன்,
லோசனா பாலசுப்பிரமணியம்.

# என் மனவானில்....

*En Manavanil*
*(2006)*



*லோசனா பாலசுப்பிரமணியம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....

- வானொலித் தேவதையே...
- அம்மா..அம்மா
- அம்மா என் அன்பு அம்மா!
- கடவுளைத் தேடி......
- சிந்தையில் நிறைந்த தந்தையே....
- இறைவனிடம் ஒரு வரம்.
- பிறவிக்குள்ளே இரகசியங்கள்.
- முதற் காதல் முற்றும் காதல்...
- சாதலை வெல்லும் காதல்!
- உனக்குப் புரியுமா....?
- கரை காணாக் கடல் அலைகள்....
- பிரியா விடைகள்.
- காத்திருக்கிறேன் காதலியே.....
- மன்னிக்க மாட்டாயா?
- உப்புக் கடலில் தாமரைகள் பூப்பதில்லை.....
- மனம் உலகின் கனம்....
- மனதில் உறுதி வேண்டும் வாக்கினில் இனிமை வேண்டும்.
- எனை ஈர்த்த கவி
- எங்கே அந்த நந்தவன நாட்கள்......
- என்னைக் கவரும் அழகு!
- இயற்கை அழகே அழகு
- கவி பிறந்த கதை
- நதியின் கதை..
- வெண்பனியே வெண்பனியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

# தமிழ்நதி நடந்த தடம்

### இளையபாரதி

கூவும் குயிலுக்கு பாட்டுக் கற்றுக் கொடுத்தவர் யார்
தலையாட்டும் இலைகளுக்கு ரசிக்கக் கற்றுக் கொடுத்தது யார்
இது இயற்கை தந்த வரம்.
ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோ ஒருவித சக்தி
ஒளிந்திருக்கிறது அது வெளிவரும்போது
உலகம் அவன் முகவரியை தெரிந்து கொள்கிறது

பூமிக்கு மேலே ஆகாயம் அதன் இடையே காற்று மண்டலம்
இங்கேதான் நாங்கள் சாலைபோட்டு நடக்கின்றோம்
அறிவு நதிகள், கவிதைப் பூவனம், ஞான விருட்சங்கள்
எங்களுக்குள்
மென்மையான நட்பு மேன்மையான பாசப் பகிர்வு
நேயர்களின் எதிர்பாப்புக்களே என் வார்ப்புக்கள்

காகித மேடையில் கோலம் போடாமல்
காவியங்கள் பல காற்றில் கரைந்திருக்கின்றன
மனப் பதிவுகளும் மன்றத்திற்கு வருவதில்லையே
என் மனவாட்டம் தணிக்க
வானலை தேசத்துக் கிழக்கு வெளிக்கக் கூவிய
கவிக்குயிலின் வாசகங்கள் காவியமாய் வந்திருப்பது கண்டு
மகிழ்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என் மனவானில்'' நூல் முகத்திற்கு அழகான முத்திரை
லோசனா பாலசுப்பிரமணியம் அவர்களே!
உங்கள் மனவானத்தை அண்ணாந்து பார்க்கிறேன்
தமிழமுத மழையில் நனைந்த சுகத்தில் பூரித்து நிற்கிறேன்.
முகில்கள் கூடினால் மழை
வண்ணப் பூக்கள் கூடினால் அழகியமாலை
நிறங்கள் ஏழுகூடி எழுதிய கவிதைதானே வானவில்
நல்ல சொற்கூட்டங்களே கவிதையாகிறது.
வண்ணத் தூரிகைபோட்ட கோலத்தையும்
நல்ல ஓவியனின் கையில் உள்ள கரித்துண்டு வென்றுவிடுகிறது.

ஓர் சமயத்தில்
மௌனம்கூட நல்ல கவிதையாகிவிடுகிறது.
எழுதிய சொற்தொடரில் எதுவெல்லாம் கவிதையென்பதைவிட
எதுவெல்லாம் எதையோ ஒன்றை நேரிடையாகவோ
அல்லது மறைமுகமாகவோ சொல்கிறதென்றால்
அதுவும் நல்ல கவிதையாகி விடுகிறது.

எங்கள் ஆத்மார்த்தமான வானலை வாழ்க்கையில்
இலட்சக் கணக்கான நட்சத்திரங்கள்
அதில் ஒன்றுதான் லோசனா பாலசுப்பிரமணியம் அவர்கள்
என்று சொல்ல முடியாது.
ஏனென்றால் அவரிடம் ஓர் தனித்தன்மையுண்டு
அதனால் அவர் வேறுபட்டு நிற்கிறார்
அவரின் கவிதைகளும் வேறுபட்டு நிற்கிறது.

நதிநடந்த தடங்களுக்கு கரையோர நாணல் சாட்சி சொல்கிறது
தமிழ் நதியே தொடர்ந்து செல்
தலைமுறை உன் பெயர் சொல்லும்.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

# தமிழின் புன்னகை கண்டேன்

கலாராஜன்

உன் மனவானில்
இத்தனை நிலாக்களா?
வாசகர் உள்ளத் தடாகத்தில்
ஒரு கொடி அல்லிகள்
மொட்டவிழ்ந்து சிரிக்கின்றன

உன் மனவானில்
கூடிய மேகங்கள் கண்டு
என் மனதுக்குள் பல்லாயிரம் மயில்கள் அல்லவா
தோகைவிரித்து நடனங்கள் ஆடிக் கொண்டன

வெட்டவெளிச் சோலையில்
என்னை வருடிய மெல்லிய பூங்காற்றே
சுத்தமான தமிழ்க் காற்று நீயென்பதால்
உன்னையே சுவாசித்தேன்....அகமும் புறமும் வாசித்தேன்.

மா,பலா,வாழை எனும் முக்கனிச் சுவைக்குமேல்
எக்கனிச் சுவையும் இல்லை
உன்மனவானில் விரிந்து செறிந்த பழமுதிர் சோலை
அந்த கவின்தமிழ் கனிமரத் தோப்புக்குள் நுழைந்தேன்
சொற்சுவை, பொருட்சுவை, அழகு தமிழ்ச்சுவை
இந்த முச்சுவைக்குமுன் முக்கனியும் தோற்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பாற்கடலை கடைந்தெடுத்து
தெவிட்டாத இன்பக் காவியம் படைத்திருக்கிறீர்கள்

நறுந்தேன் மலர் தேடி அமுதெடுத்து
ஒருகூட்டில் சேர்க்கின்ற தேனீயைப்போல்
இளமைத் தமிழை இனம்கண்டு எடுத்து
இதுவரை நான் இனங்காணாத் தமிழை
எனக்கு இனம் காட்டிய கவிஞர்
லோசனா பலசுப்பிரமணியம் அவர்களை
மனம்நிறைந்து வாழ்த்துகின்றேன்.

இது கவிதைத் தொகுப்பு அல்ல
தமிழின் புன்னகை
அழகு தமிழுக்கு புதுநடை அலங்காரம்
புதுக் கவிதை என்பதிலும்
தமிழ்ப் புலத்தில் புதிய தமிழ்ப் பயிர் செழிக்க
புதுக் கவிதை தூவியிருக்கிறார்
இந்தக் கவிஞர் என்பதே மெய்.
தொடரட்டும் கவிதைத் தேரோட்டம்!
வளரட்டும் தமிழ்ப் பணி!!

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இனிய காலை வணக்கம்....
இனிய மதிய வணக்கம்....
இனிய மாலை வணக்கம்....
என வானலையில் வரும் வேளைகளில்
காலங்களுக்கே இனிமையூட்டுபவர்
லோசனா பாலசுப்பிரமணியம்.
கவிதைகளை விட்டுவைப்பாரா?
கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஏற்படுத்தித்தந்த
உறவுகளில் பல உயிருள்ளவை என்பதற்கு
நல்லதொரு சான்று இவர்
இயல்பாகவே இனிமை இவரது இதயமொழி.
மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பவர் அதனால்
மற்றவர்களின் உணர்வுகளில் உயர்ந்துகொள்பவர்.
நம்பிக்கை மீது நம்பிக்கை வைத்தவர்.
சந்தேகங்களை சந்தேகப்பட வைப்பவர்.
முழு ஆற்றலுடன் செயல்படும் நேர்மையான சிந்தனையாளர்.
அரிதாரம் பூசாத தமிழுக்குச் சொந்தக்காரர்.
இவருக்கு இவ்வருடம் மணிவிழா என்பது சுவைக்கின்றது.
இதற்குப் பரிசாக வருவது
என் மன வானில் என்பது தித்திக்கின்து.
என்மன வானில் எனும் இக்கவிதை தொகுதி ஆகாயத்தில் முகவரி
தேடும் மேகங்கள் அல்ல.
விண்ணில் வாழத்துடிக்கும் நட்சத்திர எழுத்துக்கள்.
- எனின் படித்தவர்கள் இவரைப் பார்த்து
இனிச்சொல்வார்கள்...
இனிய தமிழே வணக்கம்...
இனிய கவிதையே வணக்கம்.
வாழ்க வளமுடன்

பாஞ்சாலன் எஸ்.ஜெகதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

***என் பார்வையில்.....***

உள்ளத்து உணர்வை உருவாக்கி, தெள்ளத் தெளிந்த தமிழில், செப்புவது கவிதை எனலாம். அந்த வகையில் லோசனா அவர்களின் "என் மனவானில்" கவிதைத் தொகுப்பு வடிக்கப்பட்டிருக்கின்றது. எளிய தமிழ்.... இலகு நடை.....உணர்ச்சி உந்தல், உள்ளதை உள்ளபடி, உண்மையின் வெளிப்பாடு, அரிதாரம் பூசாத அழகான சொற்கள் என எதுகை மோனையுடன் புனைந்துள்ள கவிதைகள் பாராட்டுதற்குரியன.

"கொஞ்சிக் கொஞ்சிக் கொல்லும் காதல்" என்ற கவிதை என்னை ஈர்த்த பல கவிதைகளில் ஒன்றாகும். "அஞ்சலின்றி நெஞ்சிலே பதிந்த பதிப்பு, அஞ்சாமல், எஞ்சாமல் என்னுள்ளே நிலைத்தாய்" அருமையான வரிகள் இவை. இன்னும் "தழைத்துச் செழித்து வளர்ந்த நேசத்தை, இழைத்து, இறுக்கமாய் இணைத்தேன் என்னுடன்" என அன்பின் ஆழத்தை, நெருக்கத்தை அழகாக இனிமையாகக் கூறி இருக்கிறார் இங்கு. இப்படியே ஒவ்வொரு வரிகளும் இனிமையானவை அழகானவை. தமிழைத் தான் காதலிப்பதை வித்தியாசமான முறையில் கவி புனைந்து இருப்பது அற்புதம். பாராட்டுக்கள் லோசனா. வாழ்த்துக்கள் பல. மொத்தத்தில் கவிதைக் கொத்து..... **Simple and sweet!**

அன்புடன்
மலர் சிதம்பரப்பிள்ளை.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை.

உள்ளக் கருத்தும், உணர்ச்சியும் கலக்கும் பொழுது கவிதை பிறப்பது இயல்பு. படிப்போர் மனதைக் கவரும் எளிமையான சொற்கோர்ப்பும், பொருட்செறிவும், தெளிவும் லோசனா அவர்களின் கவிதைகளில் நிறையவே அமைந்திருக்கின்றது. அழகு தமிழில் எளிமையும் இனிமையும் தரும் வகையில் புனையப்பட்ட "இயற்கை அழகே அழகு" என்ற கவிதை என் கருத்தில் இப்போது வருகிறது. அதில் நான் படித்து இரசித்த வரிகளில் சில இவை....

பலமான காற்றில் நடனமாடும் நாணல்கள்,
வளைந்து ஒன்றுடன் ஒன்று அணைத்தல் அழகு,.....

மழைதனில் கரையும் மண்வாசனை அழகு
மரஇலை வடிந்து மண் நோக்கி விழும் மழைத் துளியும் அழகு
தாழ்வாரத்து மழைத்துளியின் தாளமும் ஓர் அழகே

இக் கவிதையைப் படிக்கும் பொழுது அந்த இயற்கை அழகு நம் கண் முன்னே காட்சியாய் விரிகிறது. இதனை வடித்தவரும் நம் கருத்தைக் கவருகிறார். இதைத் தவிர சோகம், காதல், பாசம் நிறைந்த கவிதைகளும் இவர் கைபட்டு எமை ஈர்த்து நிற்கின்றன.

லோசனா அவர்களே, உங்கள் கவிதைகள் மேன்மேலும் வளரட்டும் மலரட்டும். "என் மனவானில்" கவிதைத் தொகுப்பிற்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்
தமிழினி

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை.

லோசனா பாலசுப்பிரமணியம் அவர்களை நான் முதன் முதலில் அடையாளம் கண்டுகொண்டதே கனேடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெட்டவெளியில் கொட்டிக் கிடக்கிறது கவிதா நிகழ்ச்சி மூலமே. அன்று அறிமுகமான நம் சிநேகம் இன்று ஆழமாய் வேரூன்றியமை மகிழ்வைத் தருகின்றது. நமது எண்ணங்கள், மன ஓட்டங்கள், எடுக்கும் முடிவுகள் அநேகமாக ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கும். அன்பானவர், பண்பானவர், பிறர் மனதைக் காயப்படுத்தக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பவர். நட்பிற்கு ஓர் இலக்கணமாக இருப்பவர் மாத்திரமன்றி, பாசமுள்ள மகளாக, நல்ல மனைவியாக, பிள்ளைகளின் நலத்திற்கு, முன்னேற்றத்திற்கு, மகிழ்ச்சிக்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்கும் தாயாக வாழ்பவர். இவரைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்.

தன் எண்ணங்களை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் கவிதையாக எழுதும் ஆற்றல் மிக்கவர். சுருக்கமாக, ஆனால் பிறரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எழுதுவதில் வல்லவர். அவரின் கவிதைத் தொகுப்பான "என் மன வானில்" அவரது அறுபதாம் ஆண்டு பிறந்த நாளில் வெளிவரும் இவ்வேளையில், அவர் நலமுடன் வாழ வாழ்த்துவதோடு, அவரது கவிதைத் தொகுப்புக்கும் எனது இதயங் கனிந்த நல் வாழ்த்துக்கள். இறைவன் லோசனா அவர்கட்கு மேன்மேலும் அருள் புரிய வேண்டுகிறேன்.

லோசனா, உங்கள் நட்பு நான் ஆழ் கடலில் தேடி எடுத்த விலைமதிப்பில்லா முத்து.

அன்புடன்

கோகிலா இராஜலிங்கம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை.

என் மன உணர்வுகளை எண்ணங்களை எம் தாய் மொழியாம் தமிழில் கோர்த்தெடுத்து கவிதையாக கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெட்டவெளி நிகழ்ச்சிக்காக எழுதியதில் சிலவற்றை "என் மனவானில்" என்கின்ற கவிதைத் தொகுப்பாக்கி உள்ளேன். காற்றலையில் இக்கவிதைகள் பல தடவை வந்து சென்ற போதும் காற்றோடு கரைந்து போய் விடக் கூடாது என்பதற்காகவும் முக்கியமாக என் ஆத்மதிருப்திக்காகவுமே இத்தொகுப்பை வெளியிடுகின்றேன்.

ஒவ்வொருவருள்ளும் உதயமாகும் ஆக்கங்களுக்கு தனிக்களம் அமைத்து ஊக்கமும் கொடுத்த தனித் தமிழ்வானொலி இயக்குனர் திரு.இளையபாரதி அவர்களுக்கு முதற் கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு எனது கவிதைத் தொகுப்புக்கு அன்புடன் ஆசி உரை வழங்கியமைக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

வெட்டவெளி நிகழ்ச்சியை நடாத்தும் கவிஞர் திரு.கலாராஜன் அவர்கள், எமது கவிதைகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுப்பவர். தயக்கம் நீக்கி, ஊக்கம் அளிப்பவர். அவரது கவித்துவம் நிறைந்த இனிய வாழ்த்துரைக்கு என் மனமார்ந்த நன்றி.

திருமதி. சகாரா, நிகழ்ச்சியை நடாத்தும் பொழுது, என் தயக்கத்தைப் போக்கி, முதல் கவிதையை எழுதத் தூண்டியவர், பாராட்டி இன்னும் எழுத உற்சாகம் ஊட்டியவர் காற்றலை உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. கமலாசந்திரன் அவர்கள். மறக்க முடியா என் அன்பான நன்றி அவருக்கு.

என் கவிதைகளை நான் நூலாக வெளியிட வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர், இன்னும் சொல்வதானால் முதன் முதலாக அந்த எண்ணத்தை என்னுள் விதைத்தவர், பாசமுள்ள காற்றலை உறவு, என்னுடைய எழுத்துக்களை மனமாரப் பாராட்டுபவர், எல்லோராலும் பாஞ்சாலன் என அன்பாக அழைக்கப்படும் திரு. ஜெகதீசன் அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

என் மீது மிகுந்த அன்பு கொண்டவர், என் நலத்தில் அதிக அக்கறை உடையவர் திருமதி. கோகிலா இராஜலிங்கம் அவர்கள். காற்றலை உறவால் நான் பெற்ற நல் நட்பு. அவரது அன்பான ஆசிகளுக்கும், வாழ்த்துரைக்கும், என்றும் என் மீது அவர் வைத்திருக்கும் தன்னலமற்ற அன்பிற்கும் இதயபூர்வமான நன்றி.

கவி புனைவதில் வல்லவரான திருமதி. மலர் சிதம்பரப்பிள்ளை அவர்களின் இரசிகையாகக் காற்றலை மூலம் அறிமுகமானேன். ஒவ்வொரு திங்களும் மறக்காது என்னைக் கவிதை எழுதும் படி தூண்டுவார். பாராட்டி உற்சாகம் ஊட்டுவார். அன்புள்ளம் கொண்ட அவரது வாழ்த்துரைக்கு மனம் நிறைந்த நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கருத்துக்களை நம் வானொலியில் சுருக்கமாக, விளக்கமாக் கூறுவதில் திறமைசாலியான தமிழினி அவர்கள் காற்றலை மூலம் எனக்குக் கிடைத்த நல் உறவு. அவர்களது அன்பான வாழ்த்துரைக்கு என் உளங் கனிந்த நன்றி.

என் கவிதைகளை நூலாக வெளியிட மகிழ்ச்சியுடன் தமது முழு ஆதரவை எனக்குத் தந்த, எல்லா வகையிலும் எனக்கு உதவி புரிந்த என் சின்னண்ணா திரு.க.ஞானகுமாரன் அவர்கட்கும் அவரது மகன் திரு.ஞா.கணாதீபன் அவர்கட்கும் என்றென்றும் கடமைப்பட்டவளாவேன். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

அன்பான காற்றலை உறவுகள், என் எழுத்துக்களைப் பாராட்டி ஊக்கம் அளிப்பவர்கள் அனைவருக்கும் அன்பான நன்றி

"என் மனவானில்" கவிதைத் தொகுப்பு என் முதல் நூல். இந்நூலிற்கு காற்றலை உறவுகளிடம் இருந்து கருத்துக்களை அன்புடன் வரவேற்கிறேன்.

நன்றியுடன் அன்பு வணக்கம்,
லோசனா பாலசுப்பிரமணியம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலித் தேவதையே...

மென்மையான நட்புடன் மேன்மை மிகு இயக்குனர், கலைஞர்களுடன், வண்ணமுற வாழ்த்துக்களோடு வாஞ்சையுடன் நேயர்கள் சூழ, ஆண்டு பத்தைப் பெருமிதத்துடன் பரிமளிப்புடன் பூர்த்தி செய்யும் தனித்தமிழ் வானொலித் தேவதையே, வணக்கத்துடன் நல் வாழ்த்துக்கள் பல.

ஒவ்வொருவருள்ளும் ஒளிந்திருக்கும் ஒப்பற்ற தனித்திறமைகளை, ஒவ்வொருவகையில் உருவகப்படுத்தி உச்சரிப்பதற்கு, ஓர் தனித்தமிழ்க் கலையகத்தை உருவாக்கிய இயக்குனர் இளையபாரதியே, உமக்கு ஒரு கோடி வணக்கங்கள், பல் கோடி வாழ்த்துக்கள், இதயத்து நன்றிகள்!

சிந்தையில் உதயமாகும் ஆக்கங்களுக்கு ஊக்கமளித்து, நெஞ்சமதில் ஊற்றெடுக்கும் உணர்வுகளுக்குத் தனிக்களம் அமைத்து, தயக்கமது களைந்து தம்கருத்துக்களைக் கலந்துரையாட வழி சமைக்கும், தூய தமிழ் வானொலியே உன்பொலிவு மேம்பட தொடரும் நல்வாழ்த்துக்கள் நன்றிகள்!

மறக்கமுடியாக் காற்றலையில் கனிந்த இனிய நல்லுறவுகளை, மனதில் நெருக்கமாக இறுக்கமாக பதிந்து படர்ந்து மலர்ந்து பரவி மணம் வீசிப் பரவசிக்க வைத்தவளே,மனதிற்கினிய மென்மையானவளே உனை வாழ்த்துகிறேன் வணங்குகிறேன்!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா.. அம்மா

வானுலகில் மகிழ்வுடன் வளையவந்த மழலை
பூவுலகிற்குப் புறப்படும் வேளை வந்ததும்
புரியாமல் விழித்தது... தவித்தது... புலம்பியது...
பழகிய பாசம் பரவசம் நிறைந்த இடம் விட்டு,
புதிய புரியாத பழக்கமற்ற மண்ணுலகிற்கு
போய்த்தான் நான் என்ன செய்வேன்?
புரியாத மொழி, பேச முடியாது தவிப்பேனே
புவியில் கொடுமைகள் அதிகம் என்பர்..
பாதுகாப்போர் யாருள்ளார் எனக்கு?
அங்கிருந்து ஆண்டவனை எப்படிப் பார்ப்பேன்?
ஆயிரம் கேள்விகள் அப்பிஞ்சு உள்ளத்துள்
மழலையின் மனவிசாரங்களை உணர்ந்த முதல்வன்,
முறுவலுடன் குழந்தையை மெதுவாக அணைத்து...
கலங்காதே மகனே, கருணை மிக்க தேவதைகளில்
ஒருத்தியை உனக்கெனத் தேர்ந்தெடுத்துள்ளேன்.
உன் வருகைக்காகக் கனிவுடன் காத்திருக்கும் அவள்
தாலாட்டுப் பாடி உன்னைக் கவனித்து மகிழ்விப்பாள்...
அழகிய இனிய வார்த்தைகளைப் பேசும் கலையை
அன்பாய் ஆதரவாய்ப் பொறுமையுடன் கற்றுக் கொடுப்பாள்.
இன்னும் தன்னுயிர் கொடுத்து நின்னுயிர் காப்பாள்.
உன்னருகே எப்போதும் நான் இருந்த போதும்
என்னிடம் பேசக் கற்றுத் தருவாள் கலக்கம் வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலகு எங்கும் ஒரே அமைதி...
மண்ணுலகிலோ மிகுந்த பரபரப்பு.....
மனம் பதைபதைக்க மழலை
தேவதையின் பெயரென்னவோ....???!!!
மெதுவாக முணுமுணுத்துச் சிணுங்கியது
தேவன் அவனோ சிறு முறுவலுடன்,
தேவதை அவள் பெயர் அவசியமில்லை கண்ணே,
சுலபமாக சுகமாக அம்மா.. அம்மா.. என
சரளமாக அன்புடன் அவளை நீ அழைத்திடலாம் என்றார்.
அம்மா அம்மா என மிழற்றிக் கொண்டே
அவனிதனில் குழந்தை அன்றே பிறந்தது அழகாய்!

❀ ❀ ❀





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என் அன்பு அம்மா!

அம்மா என் அன்பு அம்மா!
அரிதான உடலை, உயிரைத் தந்தவள் நீ,
வாழ்க்கை என்றால் என்ன என்பதை
வாழ்ந்து அனுபவிக்கச் சந்தர்ப்பம் தந்தவள் நீ
வளமான மனம் நிறைந்த நன்றி பல உனக்கு.

ஓடி விளையாடும் குழந்தைப் பருவமதில் என்
சின்னச் சின்ன பிரச்சினைகளை எல்லாம் நீ
சிறு முறுவலுடன் சுலபமாக தீர்த்திட்டாய்.
வாடிய முகம் மலர்ந்து நானும் சிரித்து
ஓடி உனை அணைத்து மறந்திடுவேன் அக்கணமே.

இளமைக் காலத்தே எமது கருத்துக்கள் பல
வேறுபட்டு பிளவுபட்டு எதிர்த் திசையில் நின்ற போது,
உன்னால் என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லையே
என்று நான் மனம் நொந்து கொண்ட பொழுதிலும்,
என் மீது நீ கொண்ட நன்மதிப்பும் மாறவில்லை...
முழுமையான உன் நல்லன்பும் குறையவில்லை...

எனக்காக நீ செய்த தியாகங்கள்..
நித்தமும் நீ பட்ட கவலைகள்.. அன்று
எனக்குப் பிடிக்காத அறிவுரைகள்..
நாளடைவில் புரிந்து கொண்டேன்
நானும் ஒரு தாயாகிய பின்னே.
அம்மா உன் தன்னலமற்ற பாசமும்,
அரவணைக்கும் கட்டுப்பாடற்ற அன்பும்
உறுதியான மனமும், உரமான விதிகளும்
இன்றும் என் வாழ்வில் இணையற்ற பொக்கிஷங்கள்..

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தையில் நிறைந்த தந்தையே....

எந்தையே என் அன்புத் தந்தையே!
சிந்தையில் நிறைந்த என்னுயிர்த் தந்தையே!!
என் அறிவு நான் பெற்ற நாள் முதல்
நின் நிமிர்ந்த நெடிய தோற்றமும்
நேரான நுண்ணறிவுப் பார்வையும்
அன்றாடம் நீ அணியும் வெண்ணிற ஆடையும்
இன்றும் என் கண் முன்னே கலையாது காண்கின்றேன்!

விதிமுறைகளைப் பாங்காக நீ விளக்கிய போது
விருப்பின்றிச் சலிப்புடன் கடைப்பிடித்தோம் அன்று..
விருத்தியடைந்த பின்னோ வியக்கின்றோம் இன்று..
வழிகாட்டிய உன் நல் விதிமுறைகளை எண்ணி..

ஒன்றாக அமர்ந்து நாம் உணவருந்தும் காலமதில்,
ஒவ்வொன்றாக நீ உரைத்த யதார்த்தங்கள் அனுபவங்கள்
ஒவ்வொன்றும் அரும் பெரும் பொக்கிஷங்களாக இன்று
ஓயாமல் இதயத்தில் மணியாய் ஒலிக்கின்றன.

பரந்த இப் பூமியில் பணம் நிலையானதல்ல
நிறைவான கல்வியே நிலையான செல்வம் என
நிதமும் பதமாக இதமாக நீ பகன்ற வார்த்தைகள்
நலியாமல் அழியாமல் தெளிவாய்த் துலங்குதே என்னுள்ளே!

உயிர்த் துணையை இழந்து என் உயிர் துடித்த போது
உயிர்ப்பான உரமான உன் குரலும் மடல்களும்
உய்த்துணர்த்தி உறுதியான மனவலு தந்ததினால்,
உழன்றிடாமல் தளன்றிடாமல் உண்மையாக வாழ்கின்றேன்.

இவ்வுலகை நீங்கி நீ மறைந்து விட்ட போதும்
என்னுலகில் இன்றும் வழிகாட்டியாய் வாழ்கின்றாய்.
கலங்கும் போது ஒளி தரும் கலங்கரை விளக்காய்
காட்சி தந்து எனைக் காத்தருள்வாய் என்றும்
எந்தையே என் தெய்வமே!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளைத் தேடி......

கடவுளைத் தேடி அலைந்தேன் நானும்
காண முடியவில்லை எங்கும் அவனை
களைத்துப் போனேன், கனத்தது மனது
துளைத்தெடுத்தன என்னுள் வினாக்கள் பல
விடை தேட முயன்றேன், விளக்கங்களோ ஏராளம்
விடவில்லை யானும் விடிவும் பெற்றேன்
என்னைச் சுற்றி உற்று நோக்க
என்னுள் ஓர் பிரகாசம் மகிழ்ச்சிக்களிப்பு
கண்டு கொண்டேன் இறைவனின் இருப்பிடம்!

கள்ளமில்லாக் குழந்தையின் மழலையில்
கணமதில் மன்னித்து மறந்திடும் குணமதில்
கருணை பொங்கும் நல் உள்ளத்தில்
கடமையைக் கண்ணாகக் கருதும் மாந்தருள்
கண்ணாரக் கண்டேன் கடவுளை நானும்.

ஆறுதல் தரும் அன்னையின் அரவணைப்பில்
உத்தம தந்தையின் வலுவூட்டும் வார்த்தைகளில்
உறுப்புக்களைத் தானம் செய்யும்
உன்னதமான இதயங்களில்
உறையும் இறைவன் தெற்றெனத் தெரிந்தான்
தெளிவடைந்தேன் நானும்.

தன்னலமற்ற சேவை செய்யும் தொண்டர்களில்
தோழமைக்குத் தோள்கொடுத்துத்
துயர் தீர்க்கும் கரங்களில்
சத்தியமான சாத்துவீகமான தியாக சீவன்களில்
சிக்கெனச் சிவன் சிநேகம் கொள்வதைப்
பக்தியுடன் பார்த்தேன் பரவசம் அடைந்தேன்!

சேதங்களைத் தடுக்கையில்
மனதில் சாந்தி பெருகையில்
சிந்தையில் வஞ்சம் ஒழிகையில்
நெஞ்சமதில் கள்ளம் கழர்கையில்
நெருங்கி வருவான் இறைவன் என
நிம்மதியுடன் நிறைவு பெற்றேன்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனிடம் ஒரு வரம்.

இறைவனிடம் வரம் ஒன்று வேண்டி,
இயற்றுவீர் கவிதை நீவிர் என
காற்றலையில் சேதி காதினில் நுழைந்த கணமதில்,
போறுமோ வரம் ஒன்று என எனக்குள்ளே
வியப்புடன் வினா ஒன்று நெடுமூச்சுடன் நின்றது.
வரம் பல வேண்ட என் மனம் துடித்த போதும்
வேண்டி நிற்கும் வரமோ மன்னிக்கும் மனப்பாங்கு.
வீண் கோபம், வெறுப்பு, மனதில் கனம்
வாழ்வு நகரமுடியா நரகமாய் நஞ்சாகத் தீண்ட
வெஞ்சினம் விலக வேறுபாடுகள் நீங்க
விருப்புடன் வேண்டுகிறேன்
மன்னிக்கும் மனப்பாங்கினை என்னுள்வழங்கி விடு
வளர்த்து விடு வளமாக்கி விடு இறவைா..

என்றோ கொண்ட கோபம் மறையாது
மன்னிக்கப்படாது இன்றும் வளர
முடிவின்றி வளர்ந்து விஷவிருட்சமாகி
மனிதமனம் தனக்குத் தானே நஞ்சூட்ட
உறவுகள் பிரிந்து கலைய முடிவில்லாக் கோபமாய்...
காரணமற்ற வெறுப்பாய் மறக்க முடியாமல்
மனம் சுளிக்க வாழ்வு விரயமாக...
போதும் போதும் ஆண்டவா
மனம் பொறுக்காது வேண்டுகின்றேன்
மண்ணில் மனமகிழ்வும் நிறையன்பும் தழைத்தோங்க
மனிதம் நல்வழி நடந்து, நற்பண்பு வளர்ச்சியடைய
மென்மலராய் அகமும் புறமும் விரிந்து மலர,
அமைதியும் சாந்தமும் பூரணமாய் நிலவ
எங்கும் சுபிட்சம் தோன்ற இறவைா இரங்கி நீயும்
மன்னிக்கும் மனப்பாங்கினை மாண்புடனே வரமாய்
மனிதருக்கு அளித்தருள வேண்டி வணங்குகிறேன்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிக்குள்ளே இரகசியங்கள்.

பரமனின் படைப்பின் பரம இரகசியம்
பாமரன் என்னால் பகன்றிட முடியுமா?
பிறப்புகளுக்குள்தான் எத்தனை பேதம்
பிரித்துக் காரணம் பயிலத்தான் முடியுமா?

மண்ணையும் விண்ணையும் படைத்து
மலைகளையும் நதிகளையும் அமைத்து
பசும் புல் தரையையும் பலன் தரு மரங்களையும்
தரணிக்குத் தந்தவனின் எண்ணம் யாரறிவர்?

ஆசாபாசங்களுடன் நம்மைப் படைத்த இறைவன்
இன்ப துன்பங்கள் வெற்றி தோல்விகளில் உழலவிட்டு
நிலையற்றவாழ்வினைப் பகுத்தறியும் ஆற்றலையும், நம்பிக்கை
மனவலுவினையும் நம்முள் வைத்தான்.

பிறக்கும் பொழுது வெறுமே வந்தோம்
இறக்கும் பொழுதும் அதுவே நமக்கு என
உணர்ந்து வாழும் வரை நமக்காகக் கொஞ்சம், பிறர்க்காகக்
கொஞ்சம் என வாழ்வதனை முற்றாக வாழ்ந்து விண்ணவனுக்கு
நன்றி கூறிடுவோம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற் காதல் முற்றும் காதல்...

முதற் காதல் முற்றும் காதல்.....
மென்மையாகக் காதில் உரசிச் சென்று
குழப்பியது என்னை சற்றுத் தடுமாறினேன்
கருத்தின் ஆழம் புரியாது தவித்தேன் முதலில்,
முதற் காதல்....ம். அதன் ஆரம்பம்தான் எதுவோ?

ஆரம்ப அன்பு அது அன்னையின் மடியில்...
அன்னை புரிய வைத்தாள் தந்தையின் பாசம்
அண்ணா அக்கா தம்பி தங்கை என
அன்பு விரிந்தது.. பரந்தது பாசமாய்..

பள்ளிப் பருவத்தே பழகிய மாணவரிடையே
பாசம் வளர்ந்து நட்பாய் மலர்ந்தது
படர்ந்தது கல்லூரி வாழ்க்கையிலும் அன்பு, அது
பிரியாமல் தொடர்ந்தது பின்னைய வாழ்க்கையிலும்..

இதயத்தில் பதிந்தவரின் இனிமையான காதல்
இறைவன் அருளால் திருமணத்தில் நிறைவுற
அருமையாய் இரு ஆண் குழந்தைகளின் வரவில்
அற்புதமான புதிய பாசம் அழகாய்ப் படர்ந்தது.

அன்பின் முழுமை பேரக்குழந்தைகளின் வருகையால்
ஆனந்தமாய்ப் பின்னிப் பிணைய புன்னகை பூக்க
அன்னையால் அறிந்த நேசம் அளவின்றிப் பரிமளிக்க
இனிமையான முதற் காதல் வாழ்வு முற்றும் காதல் ஆயிற்றே!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதலை வெல்லும் காதல்!

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாய்
இன்புறு சொல்லே இடுதிரியாய்
அவனுள் அவளுமாய் அவளுள் அவனுமாய்,
சுடராகிச் சொந்தமாயினர் சுந்தரக் காதலிலே!

காந்தமாய் இழுக்கும் அவன் கருணைக் கண்கள்
சிந்தையை மயக்கும் அவன் சுந்தரப் புன்னகை
சொந்தம் தனக்கே தனக்கென இறுமாந்து அவள்
சொக்கிப் போன நேரங்கள் சுகமான காலங்கள்..

கூற்றுவனின் கூரிய கணிப்பில் அவன்
கணக்காய்ச் சிக்கி அகப்பட்டுவிடினும் அவள்
காதல் சிதறி மடியவுமில்லை மறையவுமில்லை,
கொண்ட உணர்வுகள் இன்றும் பிரியவுமில்லை.

சித்தத்துள் மலர்ந்த சுந்தரக் கனவுகள்
சத்தமின்றிச் சிதைந்துவிடினும் வாழ்கின்றாள்
நித்தியமான நிசமான அவன் காதல்
இதயத்துள் அணையாமல் ஒளிர்வதால்!

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குப் புரியுமா....?

கலைந்து போகா என் மனக்கவலைகள்
கண்ணீரில் கரையாத் துன்பங்கள்
கரை காண முடியா மனச்சுமைகள்
கனத்து மனத்துள் பதிந்தன ஆழமாய்..

கணநேரம் எட்டிப் பார்த்து மறையும் மென்வலி சில
கால வெள்ளத்தில் கலைந்து போகும் காயங்கள் சில
காலமெல்லாம் கனத்துக் கீறலாய்க் கோடிட்டு
காலன் வரும்வரை காத்திரக்கும் கொடுந்தழும்புகளாய் சில..

சொல்ல நினைப்பதுண்டு சொல்லித்தான் தீருமா?
சொன்னால் தான் ஆறுமா?
உண்மையைக் கூறின் உன்னால் உணரத்தான் முடியுமா?
உதடுகள் சிரிக்க ஊமையாய் உள்மனம் அழ
உரைக்காமலே வாழ்கிறேன் என் உயிர் போகும் வரை..

இறைவனிடம் இறைஞ்சியதுண்டு என் இதய வலிதன்னை
ஈரமுள்ள ஈசன் அவன் இரங்கல் பார்வையில்
இதயத்தில் நிம்மதி வந்து போகும் சில சமயம், ஆயினும்
இருக்கை விட்டுப் போகா இறக்கா வலிகள் அவை.

என் இதயம் சுமக்கும் மாறாக் காயங்கள்
எனக்கு மட்டுமே தெரிந்த எந்தன் சொந்தங்கள்
எனக்குள்ளே குமுறி அழும் என்மனப் பாரங்கள்
என்னுள்ளே ஒளிந்து என்னோடு மடியட்டும்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை காணாக் கடல் அலைகள்....

ஆசையாய் அன்று நான் வரைந்த ஓவியம்
உருக்குலைந்து கிடக்கின்றது இன்று ஓர் ஓரத்தில்.....
சோகத்தின் நினைவலைகளை மெல்லத்
தூசி தட்டிப் பார்க்கின்றேன் நெஞ்சம் விம்ம......

தொலைதூரப் பயணத்தில் தொடர்ந்து வந்தேன் உன்னுடன்..
தொலைந்து போன பாதையில் தொடராமல் நின்றேன்
சூன்யத்தை வெறித்து சும்மா நிற்கின்றேன்
என்றாலும் இன்னும் நான் வாழ்கின்றேன்
இதயத்தில் நீ அணையாமல் ஒளிர்வதால்.....

எப்போதோ நாம் சேர்த்த எதிர்காலக் கனவுகள்
இப்போது என் எதிரில் வண்ணமாக வடிவமைந்தும்
உவப்பேதும் காணாமல் உள்மனது அழுகின்றது
இறைவனின் கருணை என் பக்கம் இருந்தால்
இன்னும் ஓர் பிறவியில் உன்னை நான் கண்டால்
என்னுடன் உன் வாழ்வை இறுக்கமாய் இணைப்பேன்
என்றுமே பிரியாமல் உன்னை நான் தொடர்வேன்.....

✣ ✣ ✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியா விடைகள்.

அன்னையின் கருவறை சுகமான மெதுவறை
அச்சமில்லா அகம் அமிர்தமாய் உணவு ஆனந்த சயனம்
இஷ்டமின்றி அழுகுரலுடன் இவ்வுலகு வந்ததே
எம்மையறியாமலே கருவறைக்கு நாம் கொடுத்த முதற் பிரியாவிடையோ?

அன்பும் ஆதரவும் தந்த பெற்றேரைப் பிரிந்து
அரிவரிப் படிப்பிற்காக சில மணி நேரம்
அழுகையுடன் முதன் முதலில் கண்ட அதிர்ச்சி
அதுவும் சிறிய பருவத்தே நாம் கொடுத்த பிரியாவிடையன்றோ?

நட்பினை முதன் முதலில் அறியவைத்த சிநேகிதிக்கு
நேரில் விடைகூற முடியாமல் இனக்கலவரம் இடையூறிட
நகரும் புகையிரதத்தின் ஒரு மூலையில் அமர்ந்து
நான் மானசீகமாகக் கண்கலங்கியதும் பிரியாவிடையன்றோ?

கல்லூரி வாழ்க்கை... கலகலப்பான பொழுதுகள்....
கடைசிப் பரீட்சை முடிந்த இறுதி நாள் கனத்த மனத்துடன்
கண்கலங்க எழுந்த எண்ணங்களை கையழுத்திட்டுப் பரிமாறி
கைகோர்த்துப் பிரிய மனமின்றிப் பிரிந்ததும் பிரியாவிடையே!

மனம் நிறைந்த மணாளனை மணம் முடித்த நன்னாள்
மனதில் இன்பமும் துன்பமும் ஒருமுகமாக் கலந்த சஞ்சலம்
மறக்க முடியா இறுக்கமாகப் பிணைந்த இரத்த சொந்தங்களுக்கு
மீண்டும் மீண்டும் சொன்ன பிரியாவிடையை மறக்கத்தான் முடியுமா?

தாயகத்திலிருந்து திடீரென வந்த துயர்ச் செய்தி
தந்தையின் மரணம் சென்று பார்க்க முடியா அரசியல் நெருக்கடி
தாளாத் துயரம் தவிப்பு திகைப்பு நெஞ்சில் முட்டி மோத
தனிமையில் கண்ணீருடன் கைகூப்பியதை என்னென்று கூறுவேன்?

பிரியமான உறவுகள் பிரிய நேர்ந்த போதும் இதயத்தே
பதித்து சுமந்த பந்தத்தை எவராலும் பிரிக்கத்தான் முடியுமா?
பிரிய மறுக்கும் உறவுகளுக்கும் பிரிக்கமுடியா உறவுகளுக்கும்
பிரியாவிடை கொடுக்கத்தான் முடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கிறேன் காதலியே.....

உன் இதயத்தில் எனக்கு ஒரு இடம் இருக்குமாயின்
அதை இப்போதே என்னிடம் கூறி விடு!
நயமான மென்மையான இனிய உணர்வுகளை
நியாயமாக உண்மையாகப் பாயும் அன்பை
நீ இப்போதே சொல்லிவிடு என்னிடம்!

என் உயிர் பிரியும் வரை காத்திராமல்
என் இதயத்துடிப்பு உன் காதில் கேட்கும் பொழுதே
செவ்விதழ் விரித்து செப்பிவிடு உன் காதலை
இன்னும் நீ தாமதித்தால்.....
குளிரான கல்லறை என்னை மூடுகையில்
உன் இதயத்தின் அன்பு வார்த்தைகள்
என் சக்தியற்ற செவிகளில் எட்டமாட்டா
அவை சில்லென்ற கல்லறைமேல் வெற்றாகப்
பொறிக்கப்படுவதை நீ விரும்புவாயா?

என்னைப்பற்றிய பிரியமான இனிய நினைவுகள்
உனக்கு இன்னும் இருக்குமாயின், அவற்றை
உன் சூடான மூச்சுக்காற்று என்னை வருட
என் காதில் மெதுவாக உரசிவிடு
என்னை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திவிடும்
ஏன் இதனை நீ உணர மறுக்கிறாய்?

நான் தூங்கும்வரை நீ காத்திருப்பாயானால்
நெடுந்துாக்கத்திலிருந்து விழிக்காவேளை
என் அன்புக்கு உரியவளே உன் வார்த்தைகளை
உரமான சுவர்ப்புவி தடுத்துவிடும்
உன் மென்கரங்களின் ஆதரவான அணைப்பு
இனிய மென் இதழ்களின் ஸ்பரிசம்
எனக்கு இப்போது வேண்டும்!
என் வாழ்க்கையின் கடைசி ஓய்வுப்படுக்கையில்
என் முகத்தின் மேல் புல் முளைத்த பின்னர்
எனக்கு எதுவுமே தேவையற்றவை
எண்ணி ஏங்கவும் என்னால் முடியாது
என் இனியவளே என்னை நீ காதலித்தால்
இப்போதே செப்பிவிடு என்னுயிர் பிரியுமுன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்க மாட்டாயா?

மன்னித்து விடுஎன்னை, மறந்துவிடு என் தவறை
மென்மையான உன் உள்ளத்தை
மோதி மிதித்து முறித்தமை
மதி கெட்ட செயல்தான்
என் செய்வேன் என்னவளே
என்னிடம் இரக்கம் காட்டாயோ?

சின்னம் சிறு வயதில் உன்னை
சீண்டி நான் கிண்டல் செய்கையில்
சினந்து நீ சிணுங்கிய போது
சும்மா சொன்னேன்டா என்றதும்
சில நிமிடங்களில் உன் கோபம்
சிறகடித்துப் பறந்துவிட
சித்திரமாய் சிரித்து நீயும் சேர்ந்திடுவாய்
மகிழ்ந்து மறந்து மன்னித்தும் விடுவாய்.

குழந்தையுள்ளம் கொண்டவளே
களைந்து விடு உன் கோபம்
கோடு போட்டு என்னை வேறாக்காது
வெறுப்புச் சுவரை வீணே வளர்க்காது
வெந்து நீயும் மாய்ந்து போகாது
மறந்து விடு என் மனதிற்கினியாளே
மீண்டும் கேட்கிறேன் மன்னிக்க மாட்டாயா?

◆ ◆ ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புக் கடலில் தாமரைகள் பூப்பதில்லை.....

உண்மையற்ற உலகத்தில் நல்லுணர்வுகள் பிறப்பதில்லை
நல்லுணர்வுகளற்ற உடலில் உயிரோட்டம் இருப்பதில்லை
உயிரோட்டமற்ற வாழ்வில் உயிர்ப்புன்னகை பூப்பதில்லை
ஈரமற்ற பாறை நெஞ்சில் ஈவிரக்கம் கசிவதில்லை.

சந்தேகம் வாழும் உள்ளத்தில் சந்தோஷம் பொங்குவதில்லை
சஞ்சலம் நிறைந்த சிந்தையில் சாந்தி நிலைப்பதில்லை சுந்தர
எண்ணங்களின்றி சுகங்கள் சோபிப்பதில்லை
சொந்தங்கள் சிதறிவிட்டால் சீவியம் சுகிப்பதில்லை

அன்பில்லா அகமதில் ஆனந்த அரவணைப்பு எழுவதில்லை
நேயமற்ற நெஞ்சமதில் உண்மை நட்பு நிலைப்பதில்லை
பண்பற்ற இதயத்தில் இங்கிதம் இயங்குவதில்லை
பொறாமைத் தீ வளர்ந்தால் போற்றும் குணம் கனிவதில்லை

அகம்பாவத்தின் ஆளுகையில் அறிவு முதிர்வதில்லை
தாழ்வு மனப்பான்மையில் வாழ்வில் ஏற்றம் இல்லை
தப்புத் தாளங்களில் சங்கீதம் இனிப்பதில்லை
உப்புக் கடலில் தாமரைகள் பூப்பதில்லை

❖ ❖ ❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் உலகின் கனம்..

மனம் அது நமக்குள் எங்குள்ளது?
இதயத்திலா.. உள்ளத்திலா.. உடல் முழுவதுமா..
விந்தையானது மனம் விசித்திரமானதும் கூட
மறக்க நினைப்பதும் மறக்க மறுப்பதும்
மின் வேகத்தில் உடலைவிட்டு எங்கெங்கோ பறந்து
பின் மறுபடி தன்னிடத்தே இறங்கி வருவதும் மனமே!

மாறுபட்ட உணர்வுகளே மனத்தின் லயங்கள்
மிகவும் கனமானதும் கலக்கத்தில் ஆழ்த்துவதும்
உள் மனம் அழுகையில் உதடுகளைச் சிரிக்க வைப்பதுவும்
ஊமையாக இருந்து கொண்டே உபத்திரவம் தருவதுவும்
அன்பு செய்வதுவும் அலட்சியப்படுத்துவதுவும்
அடங்கி நிற்பதுவும் அடக்கி வைப்பதுவும்
அலைய வைப்பதுவும், அகங்காரம் கொள்வதுவும்,
அதி சக்தி வாய்ந்த இப் பாழும் மனமே!

அடிக்கடி மாறும் ஆழமான மனமதனை
அடித்து நிறுத்தி ஆழத் துணிந்தோமாயின்
அடங்கும் மனம் அமைதியுடன் ஆண்டவன் அருள் நாடி
அவன் பாதம் அடி பணிந்து வணங்கி நிற்கும்!

☆ ☆ ☆


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் உறுதி வேண்டும்
# வாக்கினில் இனிமை வேண்டும்.

பொய்கள் பொறாமைகள் இறந்து போக
போற்றும் குணங்கள் பிறந்து செழிக்க வேண்டும்
புரையோடிய உறவுகள் நலிந்து போக
புத்தியுடன் விலகப் பயில வேண்டும்.
புன்னகை தவழ நல்லுறவுகளைப்
புரிந்துணர்ந்து பழக வேண்டும்.
விதவை என்றாலே வாழ்வற்றவள் என்ற
வசைபாடும் சின்னத்தனம் ஒழிய வேண்டும்.
மரபுச் சடங்குகள் எனும் போர்வையில்
மனதைக் கூறு போடும் சம்பிரதாயங்கள் மறைய வேண்டும்.
நன்மைகள் பல செய்யும் நல் மனிதருக்கு
நன்றி கூறிப் பாராட்டும் நற் பண்பு வேண்டும்
அன்புடன் அணைக்கும் ஆதரவான கைகளினால்
ஆனந்தம் எங்கும் பொங்கி வழிய வேண்டும்.
இன்பமாக என்றும் இனித்து இனிதாய் வாழ
இனிய இலகுவான மென் வார்த்தை வேண்டும்.
உண்மையான அன்புடன் உறவுகளுடன் என்றும்
உறவாடி உதவி மகிழும் மனப்பாங்கு வேண்டும்.
எங்கும் அன்பு பரந்து மலர்ந்து மணம் பரப்ப
ஏக்கங்கள் மறைந்து மடிந்து விட வேண்டும்.
என்றும் நம் கண்களில் கருணை பொங்கும் பார்வை வேண்டும்.
காதல் வாழும் நெஞ்சம் வேண்டும்.
கனவில் கூடக் காதல் வேண்டும். அமுதமாம் இனிய அருந்
தமிழை ஆதர்சித்து அருந்திட வேண்டும்.
அற்புதமான ஆண்டவன் மீது அளவில்லாப் பக்தி வேண்டும்.
என்றும் இவை மனதில் உரமாய் உறுதியானால் வாழ்வு வளமாகி
மகிழ்ச்சி பொங்குமே!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை ஈர்த்த கவி

சின்னஞ் சிறுமியாய் சிட்டுக்குருவியாய்
சிறகடித்துப் பறந்த காலம்முதல்
தன்னந் தனிமையில் துயருடன்
தள்ளாடித் தளரும் காலம்வரை
சிந்தையில் சுகமாய் சுகந்தமாய்
சுதந்திரமாய் சுற்றிச் சுற்றி வருவது
சுந்தரத் தமிழ் சுப்பிரமணி பாரதி கவிகளே!

புதுமைப் பெண்ணைப் புதிதாகப் படைத்த கவி
பூகம்பமாய் உணர்வுகளை உரத்து வெடித்த கவி
சாதிக் கொடுமைகளை வெகுவாக வெறுத்த கவி
சமூகத்தின் மீது குன்றாக்கோபங் கொண்டெழுந்த கவி
சுதந்திர தாகம் தணியாமல் குமிறிய சுப்பிரமணிய பாரதி!

காற்று வெளியிடைக் கண்ணம்மா பாடல்..
காதலின் மகிமையை அமுதமாய் இதயத்தே
குடி கொண்டு என்னைக் களிக்கவைத்தது.
மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்....
மனதை மயக்கி நெகிழ்த்தி என்னுள்ளே நிலைத்துவிட்டது.

சுற்றும் சுடர்விழிக் கண்ணம்மா....
சுந்தரக் கவிதையது.... சிந்தை விட்டகலாதது.
என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
இன்றும் தாரக மந்திரமாய் என் காதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாமல் ஒலித்து நிலைத்து நிற்கின்றது.
நெஞ்சு வெடித்து அவர் பாடிய
நெஞ்சு பொறுக்குதில்லையே பாடல்
நிசமாக என்னை நெருடும் நெஞ்சுருக்கும்.

நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே என
நிற்காமல் ஓடும் நிலையற்ற வாழ்க்கையினை
சொற்களின் கோர்வையில் நேர்த்தியாக வடித்தவர்
நேர்கொண்ட பார்வையும் நெடிய தோற்றமும்
ஓரிடத்தே கொண்ட ஓங்கார நாதம் அவர்
நாட்டின் சுதந்திரத்திற்காக தன்னலம் ஒறுத்தவர்
நாவிலும் நாசியிலும் தமிழை நேசித்தவர்

நோயுற்ற போதிலும் நொடியாத புதுமைக் கவி
நீண்ட காலமாய் என்னகத்தே பதிந்த புரட்சிக் கவி
நாள்தோறும் நான் நவிலும் நற் தமிழ் கவிதை புனைந்த கவி
நெஞ்சில் பராசக்தியை நேசித்து உபாசிக்கும் பாரதி.
நிலையாக என்னை ஈர்த்த கவி இவரன்றி எவருள்ளார்?

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே அந்த நந்தவன நாட்கள்......

அற்புதமான ஆனந்தமான அந்த நாட்கள்
அமுதமாய் நெஞ்சில் இனிக்கும் என்றும் எப்போதும்
அறிவறிந்த அகவைதனில் அன்னையின் அணைப்பு
ஆசையுடன் அவர் பரிமாறிய அமிர்தமாம் உணவு
அண்ணா அக்கா தம்பி தங்கையுடன் ஒன்றாய்
அமர்ந்து உணவருந்திக் களித்த நாட்கள்
அன்பு அறிவு ஆன்மீகம் மூன்றையும் அள்ளியளித்த தந்தை
அவர் தம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியும் அடங்காமலும்
அமைதியாகவும் ஆர்ப்பாட்டமாகவும் ஓடிக் கழித்த நாட்கள்
அயல் வீட்டு நண்பர்களுடன் அடிக்கடி போட்ட சண்டைகள்
அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகள்
அம்மாவிடம் வாங்கிய அடிகள் பள்ளிப் பருவத்தில்
பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்த காலங்கள் பக்கத்து வீட்டுப்
படலையில் கல் எறிந்து ஒளிந்து நகைத்த நாட்கள்
மணலில் வீடுகட்டி கடல்நீரில் பாவாடை நனைத்தது
மணலும் ஈரமும் படிந்த பாவாடை கால்களில் உரச
மனதில் மகிழ்வும் பயமும் ஒன்றாகிய உணர்வுடன்
முன்வாசல் வழி வீடு வராது பின்வாசலால் வந்த பொழுதுகள்
கலகலப்பான கணப்பொழுதும் மறக்கமுடியாக் கல்லூரி நாட்கள்
கலீலென்ற சிரிப்பொலிகள் களங்கமற்ற நட்புகள் கள்ளமாகக்
கல் எறிந்து பறித்த மாங்காயைக் கல்லால் அடித்துப் பகிர்ந்துண்ட
பல நாட்கள் கவலையின்றிக் குருவிகளாய்ப் பறந்த பருவங்கள்
நாள்தோறும் நந்தவனப்பூக்களாய் மலர்ந்து
நெஞ்சில் இதமாய் மென்மலராய் வருடிக் கொடுக்குமே.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கவரும் அழகு!

என்னை ஈன்ற என் அன்பு அன்னை அழகு
என்றும் மறக்கவியலா அவள் அணைப்பு அழகு
ஆதரவான ஆப்தனான என் தந்தை அழகு
ஆசானாக அயரா உழைப்பில் மிளிரும் அவர் அழகு!

இதயத்தில் என் அவர் அழகு
ஈர்த்திடும் இனிய குணம் அழகு
உளமதில் உரமாகப் பதிந்த அழகு
உயிருள்ளவரை அழியா அழகு!

மழலையின் மழலை மிழற்றல் அழகு
மனங்கவரும் செல்ல நடை ஓர் அழகு
மாசுமறுவற்ற பாசம் மிக அழகு
மலரிதழ் மெத்தென்ற முத்தமும் அழகே!

கொடுக்கும் குணம் நல் அழகு
கொண்டாடும் அன்பும் ஓர் அழகு
காரமற்ற மென் சொல் அழகு
கள்ளமற்ற உள்ளத்தின் அழகே அழகு!

சிந்தையில் நெகிழும் சிநேகம் அழகு
சுயநலமற்ற சுயமான நேசமும் அழகு
சாந்தமாக சங்கடம் தீர்க்கும் நேர்த்தியும் அழகு
சந்தோஷிக்கும் சொந்தமும் ஓர் அழகு!

வையகத்து வாழும் உயிர் ஓர் அழகு
வாழ்வினில் பிறப்பு அற்புத அழகு
வாழும் வகையில் வளரும் அழகு
வளர்த்திடுவோம் வாழ்வை அழகாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழகே அழகு

வெண்முகில் முகிழ்ந்து நீலவானை அலங்கரிக்க
விடி காலைக் கதிரவன் விரல்களால் கோலமிடல் அழகு!
பலமான காற்றில் நடனமாடும் நாணல்
வளைந்து ஒன்றை ஒன்று அணைத்தல் அழகு!

சோலையில் பலவண்ணப் பூக்களின் நறுமணம்
அலையாகத் தென்றலுடன் கலந்து நகர்தல் அழகு!
சோ.. என வான் பொழியும் மழையும்
மழைதனில் கரையும் மண்வாசனையும் அழகு!

மர இலை வடிந்து மண் நோக்கி விழும் துளியும்
தாழ்வாரத்து மழைத்துளியின் தாளமும் அழகே!
குதித்தோடும் குளிர் நதியும் அதில்
சதிராடிச் சுழன்று சிரித்து மறையும் நுரையும் அழகே!

சத்தமாகச் சலியாது சீறிப் பாயும் அலைகள்
சத்தமின்றி கரையில் நம் பாதம் தழுவிப் போதல் அழகு!
சித்தத்தை மயக்கும் பொன்நிற மாலையில் வானில்
செந்நிற சூரியகரங்கள் சித்திரம் வரைதல் அழகு!

செங்கோளமாக மேற்கே சரிந்து மறைகின்ற
நிகரற்ற சூரியப்பிழம்பும் தனி அழகே!
இரவில் கண் சிமிட்டும் நட்சத்திரக் கூட்டத்தே
உரசிச் சிரிக்கும் முழுநிலவும் மிகு அழகே!

வெண் பஞ்சாகக் கொட்டும் பனியும்
வெற்று மரக்கிளைகளை அலங்கரிக்கும் அழகும் ஓரழகே!
பச்சைப் புல்லின் மேல் படியும் விடி காலைப் பனித்துளி
சொட்டாக இலையினூடே தரை நோக்கி வடிதலும் ஓரழகே!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி பிறந்த கதை

பள்ளிப் பருவத்தில் பட்டாம் பூச்சியாய்
பறந்து பரவசித்து மகிழ்ந்த போது
பிறந்து பிரவாகித்தது சுதந்திரமாய் முதற் கவிதை
பத்திரமாய்ப் பதிந்தது என் தினசரிக் குறிப்பில்..

கல்லூரி வாழ்வின் கடின உழைப்பு
கிடைத்தும் கிடைக்காமற் போன கலாசாலைப்படிப்பு
கீறலாய் மெல்ல நெஞ்சைக் கிண்டும் பொழுதில்
காட்டமாய் கொட்டும் கடுஞ் சொல்லில் கவி ஒன்று!

உள்ளம் கொள்ளை கொண்டவரை...என்னவரை
உரிமை கொண்ட நன்னாளின் இறுமாப்பில்
உவகையில் உணர்வுகளின் விழிப்பில்
உல்லாசமாக உதித்தது களிப்பில் மலர்ந்த கவி ஒன்று!

மழலையின் மலர்க் கரங்கள் மெத்தென்று மெதுவாகத்
தழுவுகையில் மகிழ்ச்சியில் மனம் கரைகையில்
மழலை மழையில் நனைந்து மூழ்கையில்
அழகாய் மலர்ந்து விரிந்து மணம் வீசும் கவிதை ஒன்று!

இயற்கையின் விந்தை எளிமையின் அழகு
எங்கிருந்த போதும் எப்பொழுதும் மனதைக் கவர்ந்து
சொற் போர்வையில் விரிந்து மலரும்
என் சொந்தத் தமிழில் இனிய கவி ஒன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்து விட்ட வாழ்க்கையை தொடரமுடியா ஏக்கத்தை
கலைந்து மறைந்த கனவினை சோர்ந்து போன இதயத்தில்
வலித்துக் குமுறலாய் குழறிப் பிதற்றிப் பிறக்கும்
விழிகளில் நீர் பெருக சோகமான கவிதை ஒன்று!

நன்றி நவிலும் நெஞ்சம் அற்றவரை
நன்று எனப் பாராட்ட மனமில்லாதவரை
சினங்களைக் களைய மறுப்பவரை
சந்தித்தால் சிந்தையில் கனத்துதிரும் கவி ஒன்று!

உருவாகும் கவிதை அனைத்தும் ஒருங்கே
உதிர்ந்த மலர்களாய் ஒளிந்திருக்கும் என் ஏட்டில்
பதிந்து பக்குவமாய் மனதிற்கு வலு ஊட்டி
புதிதாய்க் கவி புனைய புத்துணர்வு அளிக்குமன்றோ!!!

* * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியின் கதை..

கலகல என சிரித்தோடும் களங்கமற்ற கன்னி
சலசலக்காமல் சுருதியின்றி கீதமிசைக்கும் பாவை
சிலசிலசமயங்களில் சோர்ந்து சுருங்கினாலும்
பலபல காலமாய்ப் பொங்கும் புனல் இவள்

போகும் பாதையில் சின்னஞ் சிறுபச்சையைத் தடவியும்
தாழ்ந்து தழுவத் துடிக்கும் மரக்கிளைகளைத் தொட்டும்
பகலில் கதிரவன் கைகளில் தங்கமாய் ஒளிர்ந்தும்
இரவில் நிலவின் தண்மையில் மென்மையாய் சிரிப்பாள்

கண்கொட்டாமல் இவள் அழகை இரசிப்பர் பலர்
கரையோரம் ஆனந்தமாய் நனைவர் சிலர்
வளைந்து விரைந்தோடும் நங்கை இவளை
வியந்து விமர்சித்து மகிழ்வோரும் உளரே!

மலையிலே பிறந்து வளர்ந்து குதித்தோடும் நங்கை
சிலையான பாறைகளை மோதித்தாவும் மோகினி
சளைக்காமல் மானிடருக்கு சேவை செய்யும் சேவகி
களைத்து விழுந்து கலக்கும் இடம் சமுத்திரமே!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பனியே வெண்பனியே!

வெண்பனியே வெண்பனியே
கண்மணி கூசும் குளிர் பஞ்சே
தண்மையாய் ஊசியாய் உறைத்து
மண்ணையே அழகாய்ப் போர்த்தி விட்டாய்

புயலாய்ச் சுழன்று சுழன்று
பூப்போல் உதிர்ந்து வளர்ந்து விட்டாய்
தப்பாய் உன்மேல் மிதிப்பவரை
தட்டி விழுத்திச் சிரிக்கின்றாய்

கடமையே கதியென ஓடும் மனிதரின்
கால நேரமதோ உன்கையில்
சாலையில் ஊர்திகளை ஊரவிட்டு
பாலாய்ப் பளிச்சென்று நகைத்து
நழுவி வழுவி விழுகின்றாய்

என்றுமில்லா அதிசயமாய் இல்லங்களில்
அன்புள்ளங்களின் வரவு நோக்கி
பழியாய் வாசலில் காத்திருக்கும்
விழிகளில் கெஞ்சும் ஏக்கத்தை
மொழியாய் உணர்ந்து உருகிப்
பாகாய் கரைந்து மறைந்திடுவாய்
வெண்பனியே வெண்பனியே!!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org